**CC.NO.88/2016 PW-1**

நாள் : 17.10.2024

பெயர் : சந்திரன்

த/பெ : சீதாராமன்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

எங்கு வேலை பார்த்து வருகிறீர்கள் என்றால் சிப்காட்டில் ஜாப் ஓர்க் செய்து வருகிறேன். சர்வே எண் 126/2சி வடக்கு தெற்காக தெரு உள்ளது என்று தான் புகாரில் சொல்லியுள்ளீர்கள் என்றால் ஆமாம். மேற்சொன்ன இடம் தெரு என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழ் புகாருடன் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் சொல்வது போல் கிராம நிர்வாக சான்றிதழ் எதையும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 126/2சி ல் தெரு உள்ளது என்பதை நிரூபிக்க கிராம வரைபடம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன் அது ம.சா.ஆ.6 ஆக வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ம.சா.ஆ.6 ல் உள்ள Dotted Lines தான் தெருவாகும். நீங்கள் சொல்வது தவறு ம.சா.ஆ.6 ல் காணப்படும் Dotted Lines நிலங்களுக்கு இடையே செல்லும் வரம்பு என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ளது பழைய வரைபடமாகும் எனவே சர்வே எண் 126/2சி ல் தெரு இல்லை என்றால் சரியல்ல. இன்றைய தேதியிலும் அங்கே சாலையில் மின் விளக்குகள் உள்ளது. நீங்கள் சொல்வது போல் தெருவும் கிடையாது தெரு விளக்குகளும் அங்கே இல்லை என்றால் சரியல்ல. 1993 ம் வருடம் நிலங்களை எல்லாம் அரசு கையகப்படுத்தி வீட்டு மனை பட்டாக்களாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 126/2சி ல் தெரு கிடையாது. 2 ம் எதிரியின் தந்தை கிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரியல்ல.

கிருஷ்ணன் 1986 ல் இருந்து அவர் காலத்திலேயே அந்த இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றாலும் சரியல்ல.

சர்வே எண் 126/2சி ஆனது 126/2சி1 மற்றும் 126/2சி2 வாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்சொன்ன கிருஷ்ணன் காலமாகிவிட்டதால் அந்த சொத்து 2 ம் எதிரிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அந்த இடம் முத்து பெயரில் தான் உள்ளது. எந்த காலத்திலும் சர்வே எண் 126/2சி ல் தெரு இருந்ததே கிடையாது என்றால் சரியல்ல. வழக்கானது எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சர்வே எண் 126/2சி தெரு என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டது. வேறு எந்த குற்றச்சாட்டும் புகாரில் சொல்லவில்லை என்றால் ஆமாம். எனவே புகாரில் சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல. புகாரானது தமிழில் தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தீர்கள் என்றால் ஆமாம்.

சர்வே எண் 126/2எ க்கும் சர்வே எண் 126/2சி க்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் ஆமாம். சர்வே எண் 126/2எ ல் உங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் இல்லை அதிலேயும் வழி உள்ளது. சர்வே எண் 126/2எ ல் வழி உள்ளதாக உங்கள் புகாரில் சொல்லியிருக்கிறீர்களா என்றால் இல்லை. சர்வே எண் 126/2சி ல் உள்ள தெரு பற்றி மட்டும் சொல்லியுள்ளேன். சர்வே எண் 126/2எ சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். சர்வே எண் 126/2பி யாருக்கு சொந்தமானது என்றால் வேண்டா என்பவருக்கு சொந்தமானது. நத்தம் நில வரி பட்டா வழங்கப்பட்ட பிறகு நீங்கள் சொல்வது போல் சர்வே எண் 126/2சி ல் கால்நடை பாதை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வரைபடத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

2ம் எதிரி பாஸ்கருக்கு சர்வே எண் 126/2சி சம்மந்தமாக பட்டா வழங்கப்பட்டது தவறு என்று வருவாய்துறையினரிடம் புகார் அளித்தீர்களா, மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம். மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு தாக்கல் செய்துள்ளேன். நீதி பேராணை மனு எண் 27455/2009 மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் இவ்வழக்கில் 2 ம் எதிரியான பாஸ்கரனை 5 ம் பிரதிவாதியாக சேர்த்து உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

16.09.2015 அன்று மாண்புமிகு உயர் நீதிமன்றம் மேற்சொன்ன நீதி பேராணையில் உத்திரவு வழங்கியுள்ளது என்றால் ஆமாம். உத்திரவில் கிணறானது வற்றிய நிலையில் உள்ள கிணறு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த உத்திரவில் வட்டாட்சியர் ஆக்கிரமிப்பு சம்மந்தமான சங்கதிகளை விசாரிக்க வேண்டும் என்று உத்திரவி பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மாண்புமிகு உயர் நீதிமன்ற உத்திரவிற்கு பிறகு வட்டாட்சியர் விசாரணை மேற்கொண்டார் என்று சொன்னால் இல்லை அவ்வாறு எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை.

2ம் எதிரி தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சர்வே எண்கள் 126/2எ, 126/2பி, 126/2சி யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று விவரம் கோரியுள்ளார், அதன் அடிப்படையில் பொது தகவல் அலுவலர் / வாலாஜா வட்டாட்சியர் 28.03.2018 அன்று வழங்கிய எழுத்துப்பூர்வமான தகவில் மேற்சொன்ன சர்வே எண்களை பட்டாதாரர்கள் யார் என்று குறிப்பிட்டு உத்திரவு பிறப்பித்துள்ளார் என்றால் ஆமாம். அதன் அடிப்படையில் பார்த்தால் சர்வே எண் 126/2எ வெங்கடேசன் மகன் முத்து பெயரில் பட்டா உள்ளதாகவும், சர்வே எண் 126/2பி சின்னகண்ணு மகன் உதயக்குமார் பெயரில் பட்டா உள்ளதாகவும், சர்வே எண் 126/2சி1 2ம் எதிரி பாஸ்கரன் என்பவர் பெயரில் பட்டா உள்ளதாகவும், சர்வே எண் 126/2சி2 பாஸ்கரின் தந்தை கிருஷ்ணன் என்பவரில் பெயரிலும் பட்டா உள்ளதாகவும்

குறிபிடப்பட்டுள்ளது. எனவே நீங்கள் சொல்வது போல் சர்வே எண் 126/2எ, 126/2பி, 126சி ல் எந்த தெருவும் இல்லை என்றால் சரியல்ல.

நிலவரி சீர்திருத்தத்திற்கு பிறகு 2 ம் எதிரி மற்றும் அவருடைய தகப்பனார் இடங்களை அனுபவித்து வந்ததால் அவர்கள் பெயரில் வருவாய்துறையினர் பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் கட்டிடத்தை அப்புறப்படுத்தாமல் இருந்ததற்கு எதிராக நீங்கள் எந்த வித மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் Comtempt Application தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்ததற்கு எந்த ஆதாரமும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. ஆனால் உள்ளது. புகாரில் வட்டாட்சியர் நடவடிக்கை எடுக்காததால் மேல் நடவடிக்கை எடுத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். சர்வே எண் 128/2 மற்றும் 129 இடங்களை பவானி என்பவர் கிரையம் பெற்றுள்ளார் அந்த பவானியின் மைத்துனர் தான் நீங்கள் என்றால் ஆமாம். அதே போல் சர்வே எண் 130 ல் 5 சென்ட் உங்களுக்கு சொந்தமானது என்றால் இல்லை 15 சென்ட் எனக்கு சொந்தமானது.

மேற்சொன்ன இடத்தை வீட்டு மனைகளாக பிரித்துள்ளீர்கள் அதற்கு சர்வே எண் 130 ல் பாதையை ஏற்படுத்தாமல் பக்கத்து சர்வே எண்ணில் பாதை உருவாக்கியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கு சொந்தமான இடம் என்று தெரிந்தும் அந்த இடம் தெரு என்று ஒரு பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 1 ம் எதிரி முத்து அவர் காலத்தில் 2ம் எதிரியுடன் கூட்டு சேர்ந்து சர்வே எண் 126/2சி ல் தெரு எதையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. பொய்யான ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது அதை இவ்வழக்கில் இணைத்துள்ளேன். நீங்கள் சொல்வது போல் பொது வழி சம்மந்தமாக 1 மற்றும் 2 எதிரிகள் போலி ஆவணம் எதையும் தயார் செய்யவில்லை என்றால் அது தவறு.

1 மற்றும் 2 ம் எதிரி வசம் இருந்த அவருக்கு சொந்தமான நிலங்களை தான் ஆவணங்கள் மூலமாக மாற்றி கொண்டார்கள் என்றால் சரியல்ல. உங்கள் உறவினர் பவானி என்பவர் TIIC ல் உயர் பொறுப்பில் உள்ளார் என்றால் ஆமாம். உங்கள் அண்ணன் தங்கவேல் துணை ஆட்சியராக இருந்தவர் என்றால் ஆமாம். அவர்களின் துணையோடு எதிரிகளுக்கு நீங்கள் தொல்லை கொடுத்து வருகிறீர்கள் என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு புதிய ஆவணங்கள் தயார் செய்ய முயற்சி செய்கிறீர்கள் என்றால் சரியல்ல. இந்த பிரச்சனை குறித்து நீங்கள் உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இல்லாத வழியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 ம் எதிரி உள்நோக்கத்துடன் எந்த வித போலி ஆவணங்களையும் உருவாக்கவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் புகாரில் நீங்கள் சொன்ன எந்த குற்றத்தையும் எதிரிகள் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- ***************
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.